RBI/2004-05/458

DCM (Plg) No.G.40/10.01.00/2004-05 மே 7, 2005

தலைவர்/நிர்வாக இயக்குநர்/
தலைமை நிர்வாக இயக்குநர்/அலுவர்
பொது/தனியார்/துறை/அயல்நாட்டு/வங்கிகள

அன்புடையீர்,

**ரூபாய் நோட்டுகளில் கூடுதலான/**
**மாற்றியமைக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள்**

கள்ள நோட்டுகளின் புழக்கம், குறிப்பாக ரூ 100/500 நோட்டுகளில் அதிகமாக இருப்பதால், மத்திய அரசு ஓர் உயர்மட்டக் குழுவை கூட்டி, பாதுகாப்பு அம்சங்களைப் பலப்படுத்துவது பற்றி விவாதித்தது. அக்குழுவின் பரிந்துரைகளை, அரசின் ஒப்புதலோடு ரிசர்வ் வங்கி பரிசீலித்து சில பாதுகாப்பு அம்சங்களைச் சேர்த்தும், சிலவற்றை மாற்றி அமைத்தும் வெளியிட முடிவு செய்திருக்கிறது. புதிய, திருத்தியமைக்கப்பட்ட/கூடுதலான பாதுகாப்பு அம்சங்கள் கள்ள நோட்டு அச்சடிப்பதில் பின்னடைவை ஏற்படுத்துவதோடு, நல்ல நோட்டுகளை எளிதாகக் கண்டு கொள்ளவும் உதவும்.

2. கூடுதலான/மாற்றி அமைக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடான நோட்டுகள் விரைவில் வெளியிடப்படும். ரூ 50/-ம் அதற்குமேலுமான ரூபாய் நோட்டுகளை 2005இல் படிப்படியாக வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. பணம் கையாளுவது என்பது ரிசர்வ் வங்கியில் இயந்திரமயமாக்கப்பட்டது அனைவரும் தெரிந்ததே. வங்கிகளும் இத்தகைய இயந்திரமயமாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. எனவே வரவிருக்கும் மாற்றங்கள் பற்றி, அவசியம் வங்கிகள் தெரிந்துகொண்டால் தான், தங்கள் தங்கள் இயந்திரங்களில் தேவையான உள்மாற்றங்களை உருவாக்கி அந்த மாற்றங்களை உள்வாங்கிட முடியும். ரூ 50, 100, 500, 1000/- நோட்டுகளில் செய்யவிருக்கும் புதிய / கூடுதலான பாதுகாப்பு அம்சங்கள் பற்றிய தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வங்கிகள் அவைகளை நன்கு கவனித்து கருத்தில் கொண்டு அத்தகைய நோட்டுகள் வெளிவரும்போது கையாளுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

3. நோட்டுகளில் உள்ள பாதுகாப்பு அம்சங்களில் கொண்டுவரவிருக்கும் மாறுதல்கள் பற்றிக் கருத்துக்களைப் பரிமாரிக் கொள்ளவும், அவைகளை ஏற்றுக்கொள்வதற்கான தயார் நிலையை உருவாக்கிடவும் வங்கிகளின் தலைமை அதிகாரிகள் கூட்டத்தை விரைவிலேயே கூட்ட இருக்கிறோம். அது சம்பந்தமான அறிவிப்பு பின்னர் வரும். மக்களிடையே விழிப்புணர்வை

ஏற்படுத்த, அனைத்து நடவடிக்கைகளையும், இப்புதிய நோட்டுகளைப் புழக்கத்தில் விடும்போது ரிசர்வ் வங்கி மேற்கொள்ளும் என்று சொல்லவும் வேண்டுமா.

நம்பிக்கையுள்ள

யு.எஸ். பாலிவால்
தலைமைப் பொது மேலாளர்

**இணைப்பு**

**ரூபாய் 50, 100, 500, 1000 நோட்டுகளில் ஏற்கனவே இருக்கும் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட/கூடுதல் பாதுகாப்பு அம்சங்கள்.**

| வரிசை எண் | பகுதி | ரூபாய் நோட்டின் மதிப்பு எண் | ஏற்கனவே இருக்கும் பாதுகாப்பு அம்சங்களின் விளக்கங்கள் | வரவிருக்கும் மாற்றங்களுக்கான விளக்கங்கக்ள் |
|---|---|---|---|---|
| 1 | தாள் | அனைத்து மதிப்பு நோட்டுகளு ம் | பிரத்தியேகமான நீர்க்குறியீடு உள்ள ஒருவித பருத்திரகத்திலான காதிதம். தனித்தன்மையான சிறப்பான தடவி உணரும் வகையில் அமைந்து உடைவது போன்ற சத்தத்தை எழுப்பவல்லது<br><br><u>எடை அடர்த்தி</u><br><br>ரூ 10லிருந்து ரூ 500 முடிய : 82 GSM<br>ரூ 1000 : 87.5 GSM<br><u>தடிமன்:</u><br><br>ரூ 10 லிருந்து ரூ 500 முடிய : 100 மைக்ரான்<br>ரூ 1000 : 105 மைக்ரான் | எடை அடர்த்தி<br><br>ரூ 10 லிருந்து ரூ 1000 முடிய : 90 GSM<br><br>தடிமன்:<br><br>ரூ 10 லிருந்து ரூ 1000 முடிய : 110 மைக்ரான் |
| 2 | நீர்க்குறியீடு | அனைத்து மதிப்பு நோட்டுகளு ம் | மஹாத்மா காந்தியின் திருவுருவம் ஒளி-ஒதுக்க (light and shade) வகையில் அமைந்திருக்கிறது. பல திசைகளில் நேர்கோடுகள், நோட்டினை வெளிச்சத்தில் தூக்கிப்பார்க்கையில் தெரியும். | ஏற்கனவே இருக்கும் பாதுகாப்பு அம்சங்கள் தொடரும். |
| 3 | ரகசிய நீர்க்குறியீடு | அனைத்து மதிப்பு நோட்டுகளு ம் | RBI ஆங்கில எழுத்துக்களும் நோட்டின் மதிப்பு எண்ணும் புலப்படும். | ஏற்கனவே இருக்கும் பாதுகாப்பு அம்சங்கள் தொடரும். |
| 4 | பாதுகாப்பு இழை | ரூ 1000, 500, 100 | நோட்டின் முன்புறம் விட்டுவிட்டுத் தெரியும். படிக்கத் தகுந்த ஜன்னல் | இயந்திரங்கள் படிக்கத் தக்க வகையில் ஜன்னல் மாதிரித் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மாதிரித் தெரியும் இழைகள். `பாரத்' என்று இந்தியிலும் RBI என்று ஆங்கிலத்திலும் அதனுள் அச்சடிக்கப்பட்டிருக்கும். ரூ 1000/- நோட்டில் கூடவே நோட்டின் மதிப்பான 100மும் அச்சடிக்கப்பட்டிருக்கும். நோட்டின் பின்புறம் முழுவதுமாக மறைத்து தெரியும். வெளிச்சத்தில் தூக்கிப் பார்க்கையில் ஒரே கோடாகத் தெரியும்.<br><br>புறஊதா விளக்கொளியில் (அல்ட்ரா வயலெட்) 100, 500 ரூபாய் நோட்டுக்களின் முன்புறம் நீல நிறத்தில் மிளிரும்.<br><br>1000 ரூபாய் நோட்டில் வானவில் வண்ணங்களில் மிளிரும்.<br><br><u>அகலம்:</u><br><br>ரூ 100, 500 : 1.2 mm<br>ரூ 1000 : 2 mm | தெரியும் காந்த வகையிலான பாதுகாப்பு இழை `பாரத்' என்று இந்தியிலும் RBI என்று ஆங்கிலத்திலும் 100, 500 ரூபாய் நோட்டுகளிலும், 1000 ரூபாய் நோட்டில் கூடவே 1000 என்ற எண்ணும் அச்சிடப்பட்டிருக்கும். வெவ்வேறு கோணங்களில் பார்க்ல்கையில் பச்சை நிறத்திலுள்ள பாதுகாப்பு இழை நீல நிறமாகத் தெரியும். புற ஊதாவிளக்கொளியில் பின்புறம் மஞ்சள் நிறத்தில் மிளிரும். முன்புறத்திலுள்ள வாசகங்கல் மிளிரும்.<br><u>அகலம்:</u><br><br>ரூ 1000, 500 : 3 mm<br>ரூ 100 : 2 mm |
| 5 | பாதுகாப்பு இழை | ரூ 50 | முழுமையாக மறைந்திருக்கும், படிக்கத் தகுந்த பாதுகாப்பு இழை. `பாரத்' என்று இந்தியிலும் RBI என்று ஆங்கிலத்திலும் அதனுள் அச்சடிக்கப்பட்டிருக்கும்.<br><u>அகலம்</u>: 1.2 mm | இயந்திரங்கள் படிக்கத் தக்க, ஜன்னல மாதிரி காந்த வகையிலான பாதுகாப்பு இழை. `பாரத்' என்று இந்தியிலும் RBI என்று ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டிருக்கும்.<br>ஊதாவிளக்கொளியில் இருபுறமும் மஞ்சள் நிறத்தில் மிளிரும் |
| 6 | மின்பகுப்பு நீர்மக்குறியீடு | அனைத்தும் | கிடையாது. | மஹாத்மாகாந்தியின் திருஉருவப்படத்திற்கு அருகில், நோட்டின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மதிப்பு எண் தெரியும். |
| 7 | நகலெடுக்க முடியாத நவீனம் | ரூ 50/-ம் அதற்கு மேலும் | ரூ 500/1000த்தில் மட்டும் இருக்கிறது. வண்ண நகல் எடுக்கும்போது வேறு நிறச் சாயலாக மாறிவிடும் ரிசர்வ் வங்கியும் BISம் இணைந்து உருவாக்கிய அம்சம் இது. | ரூ50/- 100/-லும் இந்த அம்சம் சேர்க்கப்படுதிறது. |
| 8 | அச்சடித்த ஆண்டு | அனைத்தும் | கிடையாது | நோட்டின் பின்புறம் அச்சடித்த ஆண்டு அச்சிடப்படும். |
| 9 | சாய்த்துப் பார்க்கும்போது மாறும் நிறம் | ரூ 500/-<br><br>ரூ 1000/- | நோட்டின் மத்தியில் நோட்டின் மதிப்பு எண் அச்சிடப்பட்டிருக்கும் பச்சை நிறத்தில் அது அச்சிடப்பட்டிருக்கும். சாய்த்துப் பார்த்தால் நீல நிறமாகத் தெரியும். எண்களின் அளவு:<br>ரூ500: 13mm X 30mm (390 sq.mm)<br><br>ரூ1000: 14.5mm X 39mm (390 sq.mm) | எண்களின் அளவு சிறியதாக்கப்பட்டு புதிய பச்சை நிறம் புதிய நீல நிறமாகத் தெரியும் வகையில் அச்சிடப்பட்டுள்ளது.<br><br>ரூ500: 12mm X 27.5mm (330 sq.mm)<br><br>ரூ1000: 12mm X 34mm (408 sq.mm) |
| 10 | சீரான பதிவு | அனைத்தும் | நோட்டின் முன்பக்கமும் பின்பக்கமும் நீர்க்குறியீட்டிற்கு அருகில் உள்ள நெடுக்க வாக்கில் உள்ள பாண்டின் (band) மத்தியில் அச்சிடப்பட்டிருக்கும் பூவலயங்கள், நோட்டை வெளிச்சத்தில் தூக்கிப் பார்த்தால் மிகவும் சீராகவும் சரியாகவும் ஒன்றோடொன்று பொருத்தி ஒரே பூவடிவமாகத் தெரியும். | இருக்கும் இந்த அம்சம் சில முன்னேற்றங்களுடன் தொடர்ந்து கடைப்பிடிக்கக்ப்பட்டு வரும். |
| 11 | மறைந்திருக்கும் மதிப்பெண் | அனைத்தும் | மஹாத்மா காந்தியின் படத்திற்கு வலது பக்கம் உள்ள செவ்வகப்பட்டையில் நோட்டின் மதிப்பெண் மறைமுகமாக அச்சடிக்கப்பட்டிருக்கிறது. கண்ணுக்கு நேராகப் | இருக்கும் இந்த அம்சம் சில முன்னேற்றங்களுடந் தொடர்ந்து கடைப்பிடிக்கக்ப்பட்டு வரும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பக்கவாட்டில் ஒரு கோணத்தில் பார்த்தால் மதிப்பெண் கண்ணுக்குத் தெரியும். | |
| 12 | நுண்ணிய எழுத்துக்கள் | அனைத்தும் | மஹாத்மா காந்தி படத்திற்கும் செவ்வகப்பட்டைக்கும் நடுவே உள்ள பகுதியில் மிக மிக நுண்ணிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்கிறது. 10ரூபாய் நோட்டுகளில் 10 என்றும் 20 ரூபாயும் அதற்கு மேலும் மதிப்பு கொண்ட நோட்டுகளில் அந்தந்த மதிப்பு எண்ணும் RBI என்ற எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டுள்ளன. பூதக் கண்ணாடியின் உதவியுடன் பார்த்தால் நன்கு தெரியும். | இருக்கும் இந்த அம்சம் தொடரும். |
| 13 | தடவி உணரும் அச்சு | அனைத்தும் | இந்தியிலும் ஆங்கிலத்திலும் உள்ள ரிசர்வ் வங்கியின் பெயர், ரிசர்வ் வங்கியின் முத்திரை, உத்தரவாத உறுதிமொழி வாசகங்கள், இடதுபுறமுள்ள அசோகா தூண் முத்திரை, ரிசர்வ் வங்கி ஆளுநரிந் தையெழுத்து, ஆகியவை தடவி உணரும் வகையில் மேலெழுந்தவாறு அச்சிடப்பட்டுள்ளன. இது 80 மைக்ரான் அளவு கொண்டதாக இருக்கிறது. ரூ500, 1000 நோட்டுகள் பின்புறமும் தடவி உணரும் அச்சு அம்சம் இருக்கிறது. | 130 மைக்ரோன் அளவு கொண்டதாக நன்கு வெகு எளிதில் உணரத்தக்கவகையில் தடவி உணரும் அச்சு மேலெழுந்தவாறு அச்சிடப்படும்.<br><br>500, 1000 ரூபாய் நோட்டுகளில் மேலெழுந்தவாறு அச்சு என்பது முன்பக்கம் மட்டுமே இருக்கும். |
| 14 | அடையாளக் குறியீடு | அனைத்தும் | ரூ50 : ■ சதுரம<br>100 : ▲ முக்கோணம<br>500 : ● வட்டம<br>1000 : ♦ டைமண்ட்<br>நீர்க்குறியீட்டிற்கு இடது புறம் மேலெழுந்தவாறு அச்சு முறையில் பார்வை இழந்தவர்கள் கூடத் தடவி உணரும் வகையில் | அதன் தடிமன் 83 மைக்ரான் அளவிலிருந்து 160 மைக்ரான் அளவில் எளிதில் தடவி உணரும் வகையில் அச்சடிக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அச்சடிக்கப்பட்டிருக்கிறது. | |
| 15 | ஒளிரும் தன்மை | அனைத்தும் | நோட்டின் வரிசை எண்களும், மத்திய பகுதியும் ஒளிரும் தன்மையுடைய மையால் அச்சிடப்பட்டுள்ளன. ரூபாய் நோட்டுகளில் சிறு சிறு இழைகளும் உள்ளன. புற ஊதா விளக்கொளியில் இரண்டுமே கண்ணுக்குப் புலப்படும். | இருக்கும் இந்த அம்சம் தொடரும். |
| 16 | சிறு சிறு கோடுகள் / இழைகள் | அனைத்தும் | ஒரே நிற இழைகள் | இரு நிறங்களில் இந்தச் சிறு இழைகள்/ கோடுகள் இருக்கும். |